தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்.11755/அ4/இ4/2020 நாள். 08.04.2023

*****

பொருள் : பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி - நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் பதவியில் விதிகளைத் தளர்த்தி தகுதிகாண் பருவம் முடித்தல் - பணிவரன்முறைப்படுத்துதல் - அறிவுரைகள் வழங்குதல் - விவரம் கோருதல் - தொடர்பாக.

பார்வை : அரசு கடித எண். 22207/ ப.க4(2)/2020, பள்ளிக் கல்வித் துறை நாள். 21.02.2023.

*****

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்து நியமனம் செய்யப்பட்ட நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறைப்டுத்துவதிலும், அவர்களது தகுதிகாண் பருவம் விளம்புவதிலும் தேவையற்ற காலதாமதாகவும், நீண்டகாலம் நிலுவையாகவும், சில நேர்வுகளில் கருத்துருவே அனுப்பாத பணியாளர்களும் உள்ளனர் என இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளன. எனவே, இப்பொருள் சார்ந்து நிருவாக நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக கீழ்காணும் விவரங்களை இவ்வாணையரகத்திற்கு மின்னஞ்சல் மூலமாகவும் (cosea4sec@gmail.com) பதிவு தபால் மூலமாகவும் **17.04.2023**க்குள் தவறாமல் அனுப்புமாறு கோரப்படுகின்றன.

1. நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் தேர்வணையம் நியமன முறையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டு அப்பதவியில் 31.03.2023 வரை பணிவரன்முறைப்படுத்தாமல் பணிபுரியும் பணியாளர்களின் விவரம்.

| வ. எண் | பணியாளர் பெயர் | **<u>பதவி</u>** உதவியாளர் / இளநிலை உதவியாளர் | பணிபுரியும் பள்ளி / அலுவலகம் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிநியமன ஆணை விவரம் | பணிவரன் முறைப்படுத்தாத காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

2. நேரடி நியமன உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் (தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில்) பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு அப்பதவியில் தகுதிகாண் பருவம் விளம்பி ஆணை பெறப்படாமல் இவ்வாணையரகத்தில் நிலுவையில் உள்ள கருத்துருக்களின் விவரம்.

| வ. எண் | பணியாளரின் பெயர் | பதவி உதவியாளர் / இளநிலை உதவியாளர் | நியமன முறை | பணிபுரியும் பள்ளி/ அலுவலகம் பெயர் | பணிவரன் முறை ஆணை விவரம் | தகுதிகாண் பருவம் அனுப்பிய கோப்பு எண்/நாள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

3. நேரடி நியமன உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் (தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில்) பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்டு அப்பதவியில் தகுதிகாண் பருவம் விளம்பி ஆணை பிறப்பிக்காமல், முதன்மைக் கல்வி அலுவலகத்தில் நிலுவையில் உள்ள கருத்துருக்களின் விவரம்.

| வ. எண் | பணியாளரின் பெயர் | பதவி உதவியாளர் / இளநிலை உதவியாளர் | நியமன முறை | பணிபுரியும் பள்ளி/ அலுவலகம் பெயர் | பணிவரன் முறை ஆணை விவரம் | நிலுவைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

<u>அறிவுரைகள்:</u>

1. பணிவரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் விளம்பி ஆணை வெளியிடப்பட வேண்டிய கருத்துருவினை எவ்வித காலதாமதத்திற்கும் இடமளிக்காமல் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. அரசளவில் தகுதிகாண் பருவம் விளம்பி ஆணை பெறப்பட வேண்டிய கருத்துருக்கள் மீது விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு அக்கருத்துருக்களை முழுமையாக பரிசீலனை செய்து உடன் இவ்வாணையரகத்திற்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

3. கருத்துருக்களை பரிந்துரை செய்யும் போது, முகப்பு கடிதம் மட்டும் இணைக்காமல், அக்கருத்துருவினை முழுமையாக பரிசீலனை செய்து அனைத்து தொடர்புடைய ஆவணங்களின் நகல்களும், உரிய சான்றுகளும், அனைத்து விவரங்களும் பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து அனுப்பிட வேண்டும்.

4. பணிவரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் விளம்பி ஆணை பெற தகுதியுடைய பணியாளர்களிடமிருந்து உடன் கருத்துருக்களை பெற்று அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு தகுதியுடைய பணியாளர் கருத்துரு சமர்ப்பிக்க வீண் காலதாமதம் ஏற்படுத்தும் நேர்வுகளில் சம்மந்தப்பட்ட பணியாளர் மீது நிருவாக நலன் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

5. பணிவரன்முறைப்படுத்தப்பட்ட பணியாளர்கள் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சிக்கு பரிந்துரை செய்து நேர்வுகளில் பல்வேறு காரணங்களுக்காக பயிற்சிக்கு செல்வதை தவிர்த்து வருகின்றனர். பின்னர் அப்பணியாளர்கள் 53 வயதினை கடந்து விட்டதால், பவானி சாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு கோரி விண்ணப்பித்து அக்கருத்துருக்கள் முதன்மைக் கல்வி அலுவலர் பரிந்துரையுடன் வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிகழ்வுகள் நிருவாக நலனுக்கு உகந்ததல்ல. மேலும், இவ்வகையான கருத்துருக்கள் அரசுக்கு பரிந்துரைக்க இயலாது என தெரிவிக்கப்படுகிறது. எனவே, இனிவரும் காலங்களில் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சிக்கு பரிந்துரைக்கப்படும் பணியாளர்கள் தவறாமல் பயிற்சியில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்பட வேண்டும். பவானி சாகர் அடிப்படைப் பயிற்சிக்கு பரிந்துரைப்பதற்கு முன்பே 53 வயதை கடந்த பணியாளர்களின் கருத்துருக்கள் மட்டுமே அரசுக்கு பரிந்துரைக்க பரிசீலிக்கப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

6. 53 வயதினை கடந்து பவானி சாகர் அடிப்படைப்பயிற்சிக்கு விலக்களிக்கக் கோரும் கருத்துருக்கள், காலம் கடந்தும் சில நேர்வுகளில் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் பெறப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வால் தனியர்கள் ஓய்வூதிய பலன்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டு பணியாளர்கள் சிரமத்திற்கு உள்ளாவது தொடர் நிகழ்வாக நடைபெற்று வருகிறது. இந்நிலை இனிவரும் காலங்களில் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் அறிவுரைகளை தவறாமல் பின்பற்றவும், இச்செயல்முறைகளை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

06/04/2023

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: அரசு முதன்மைச்செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9 தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல்: மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை - 6.
நகல்: தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
நகல்: செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை -6.
நகல்: இயக்குநர், மாநில கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-6
நகல்: தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
நகல்: இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை -6

} தங்கள் இயக்ககம் சார்ந்த விவரங்கள் அனுப்பும் பொருட்டு தகவலுக்காகப் அனுப்பப்படுகிறது.

நகல்: இவ்வாணையரக 'அ2' பிரிவு.
நகல்: அனைத்து சார்நிலை அலுவலர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக)
நகல்: இ1 மற்றும் இ3 இருக்கை